உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை ஒசூர் செயல்முறையாணை

முன்னிலை: டாக்டர். க.இளவரசன், பிவிஎஸ்சி,

ந.க.எண். 1032/ஆ/2020 நாள்: 01.09.2021

பொருள்: அமைச்சுப்பணி–தமிழ்நாடுஅரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி 4ன்கீழ் இளநிலை உதவியாளர் பணிநியமனம் செய்யப்பட்டு இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திருவாளர்கள். சீ.சுஜேன்பாபு (மற்றும்) பெ.செல்வராஜ்,இளநிலை உதவியாளர்களுக்கு பணிவரன்முறை செய்து ஆணைகள் வரப்பெற்றது – தொடர்புறுத்துதல் - தொடர்பாக

பார்வை:- 1. தமிழ்நாடுஅரசுபணியாளர் தேர்வாணையம் அலுவலக கடித ந.க.எண். 2352/PSD-1/2020 நாள் 29.05.2020

2. சென்னை-35 கால்நடைபராமரிப்பு (ம) மருத்துவப்பணிகள் கூடுதல் இயக்குநர் (கால்நடை மருத்துவப்பணிகள்) பொறுப்பு செ.ந.க.எண். 19524/ஆர் 2/2020நாள்:20.04.2021

3. மண்டல இணைஇயக்குநர்,கால்நடைபராமரிப்பு கிருஷ்ணகிரி மே.கு.ந.க.எண். 870/ஆ/2021 நாள்: 28.04.2021

-----

பார்வை-2 ல் காணும் தலைமை அலுவலக செயலாணையின்வழி, தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்டு இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு உதவி இயக்குநர், கால்நடை பராமரிப்புத்துறை அலுவலகம், ஒசூரில் பணிபுரிந்து வரும் கீழ்க்காணும் இளநிலை உதவியாளர்களுக்கு அவரவர் பெயருக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் மாண்புமிகு சென்னை மற்றும் மதுரை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள மேல்முறையீட்டு தீர்ப்பாணையின் இறுதி முடிவுக்கு கட்டுப்பட்டு பணிவரன்முறை செய்து ஆணைகள் வரப்பெற்றுள்ளதைத் தொடர்ந்து இப்பணியாளர்களுக்கு பணிவரன்முறை ஆணைகள் இதன்வழி சார்பு செய்து உத்தரவிடப்படுகிறது.

| பெயர் (ம) பதவி திருவாளர்கள் | பணிபுரியும் இடம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் |
|---|---|---|---|
| சீ. சுஜேன்பாபு இளநிலை உதவியாளர் | உதவி இயக்குநர் அலுவலகம், கால்நடை பராமரிப்பு ஒசூர் கோட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம் | 18.08.2020 முற்பகல் | 18.08.2020 முற்பகல் |
| செல்வராஜ்.பெ இளநிலை உதவியாளர் | | 28.08.2020 முற்பகல் | 28.08.2020 முற்பகல் |

மேலும் இப்பணியாளர்களுக்கு பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து இவர்கள் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டு காலத்திற்குள் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகின்றனர். மேலும் இவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய வருடாந்திர ஊதிய உயர்வுகள் ( முதல் ஊதிய உயர்வு நீங்கலாக) மற்றும் தகுதிகாண் பருவம் முடித்தமைக்கான ஆணைகள் யாவும் தனியர்கள் பவானி சாகர் பயிற்சி முடித்து தேர்ச்சி பெற்ற பின்னரே வழங்கப்படும் எனவும் இதன்வழி தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. பணிவரன்முறை ஆணைகள் நகல் இத்துடன் இணைத்தனுப்பி வைக்கப்படுகிறது. பணிவரன்முறை ஆணைகள் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை இவ்வலுவலகத்திற்கு சமர்ப்பித்திடவும் சம்மந்தப்பட்ட பணியாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு தலைமை அலுவலகத்தால் வழங்கப்பட்ட
பணிவரன்முறை ஆணை நகல்

உதவி இயக்குநர்
கால்நடை பராமரிப்புத்துறை, ஒசூர்

பெறுதல்

**திரு. சீ.சுஜேன்பாபு, இளநிலை உதவியாளர்**
**திரு. செல்வராஜ்.பெ ,இளநிலை உதவியாளர் ... இவ்வலுவலகம்**

நகல்: பணிப்பதிவேட்டிற்கு

நகல்: இருப்பு கோப்பு

துச